**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO I, SATTUR**

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC.53/2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution DW- 2 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : **திரு.செந்தில் (உதவியாளர்)** |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 of BNSS மனுவானது இணையவழியாக பதிவேற்றம் செய்யப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

09.04.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்பொழுது வணிக வரித்துறை அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் B.A. History வரை படித்துள்ளேன். இன்று யாருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் இணை ஆணையர் சார்பாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இணை ஆணையர் அவர்களுக்கு சாட்சியம் அளிக்க எழுத்து மூலமாக மனு கொடுத்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சொர்ணலட்சுமி இன்ஜினியரிங் கம்பெனியின் Registration ஆவணத்தினை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேற்படி ஆவணமானது **எ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கம்பெனியின் உரிமையாளர்கள் யார் யார் என்றால் பாலசுப்பிரமணியம், பழனி, செல்வக்குமாரி ஆகியோர்கள் ஆவார்கள்.

மேற்படி கம்பெனியானது எந்த வகையை சார்ந்ததென்றால் Partnership கம்பெனி ஆகும். ருத்ரா வயர்டெக் கம்பெனியின் பதிவுச்சான்றிதழை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேற்படி ஆவணமானது **எ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ருத்ரா வயர்டெக்கம்பெனியின் உரிமையாளர் அமலி ஆவார். மேற்படி கம்பெனியானது எந்தவகையை சார்ந்ததென்றால் proprietorship கம்பெனி ஆகும்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) நான் தாக்கல் செய்துள்ள சொர்ணலட்சுமி இன்ஞ்சினியரிங் கம்பெனியின் Registration ஆவணத்தின் படி அந்த கம்பெனியானது Partner ship firm என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அதன் பங்குதாரரான பாலசுப்பிரமணியம் என்பவர் சொர்ணவேல் என்பவரின் மகன் என்றால் சரிதான். நான் இன்று சாட்சி சொல்ல வந்த வழக்கானது காசோலை மோசடி வழக்கு என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். சொர்ணவேல் என்பவருக்கு எத்தனை பிள்ளைகள் என்பவது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மீதியுள்ள பங்குதாரர்களான பழனி, செல்வக்குமாரி ஆகியோர்கள் சொர்ணவேலின் குடும்பத்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கின் எதிரியாக உள்ள லட்சுமிபதியும் சொர்ணவேலின் மகன்களில் ஒருவர் என்றும் ஆனால் அது குறித்து எனக்கு தெரியாதென்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொர்ணலட்சுமி இன்ஜினியரிங் கம்பெனியானது தற்போது செயல்பாட்டில் இல்லை என்றால் சரிதான். 08.04.2022 ம் தேதி மேற்படி கம்பெனியானது செயல்பாட்டினை நிறுத்திவிட்டது.